**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**IDOP. NO. 44 OF 2020**
**Deposition of Witness for : PW. 1**

| | | |
|---|---|---|
| Name | : | சகாயஜெயபிரகாஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.07.2023.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர் ஜாக்குலின் ஜான்சிராணிக்கும் 14.05.2003 அன்று திருமணம் ஆனது. திருமணம் எனது சொந்தஊரான நங்காத்தூரில் கிறிஸ்துவ முறைப்படி நடந்தது. எங்களுக்கு 2 மகள்கள் ஒரு மகன். நான் 24 வருடங்கள் ராணுவத்தில் அவுல்தாரராக பணிபுரிந்தேன். எனக்கு மது குடிக்கும் பயக்கம் உண்டு. நான் திருமணம் ஆன பிறகு என் மனைவியை அடித்து கொடுமை செய்கிறேன் என்று சொல்லி ஆலய பங்குதந்தையிடம் எனது மனைவி புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான் . அதே போல் வேட்டவலம் காவல் நிலையத்திலும் என் மனைவி என் மீது பல புகார்கள் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும் போது மிலிட்டரியில் வேலை செய்தவராக இருக்கிறீர்கள் ஆகவே மனைவியை அடித்து துன்புறத்த கூடாது என அறிவுரை வழங்கினார்களா என்றால் ஆம் வழங்கினார்கள் . இதே நீதிமன்றத்தில் ஐடிஓபி 2/2017 என்ற வழக்கை என் மனைவிக்கு எதிராக

விவாகரத்து கேட்டு வழக்கை நான் தாக்கல் செய்தேன் . நான் என் மனைவியுடன் சேர்ந்து வாழ்கிறேன் என்று சொன்னதன் பேரில் அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் என் மனைவியும் என்னுடன் சேர்ந்து வாழ்கிறேன் என்று சொன்னதால் தான் அந்த வழக்கு 05.01.2018 அன்று தள்ளுபடி ஆனது . நான் 2018 ம் ஆண்டு மே மாதம் என் பிள்ளைகளின் விடுமுறையின் போது என் மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்து கொண்டு சிக்கீமில் உள்ள ராணுவ முகாமிற்கு சென்றேனா என்றால் சென்றேன், ஆனால் முதலில் என் மனைவி வர மறுத்துவிட்டார், பிறகு மீண்டும் நான் வற்புறுத்தியதால் என் மனைவி பிள்ளைகளுடன் சிக்கீம் வந்தார் . சிக்கீம் ராணுவ முகாமில் என் மனைவியை நான் அடித்து துன்புறுத்தியதால் ராணுவ அதிகாரிகள் என்னை கோட்டர் காடில் வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நங்காத்தூரில் என் மனைவிக்காக ரூபாய் 70 லட்சம் செலவு செய்து வீடு கட்டினேன் என்று பொய் சொல்கிறேன் என்றும் மேற்படி வீடு எனது பெற்றோருக்காக தான் நான் கட்டினேன் என்று சொன்னால் சரியல்ல . வேட்டவலத்தில் என் மனைவி கட்டின வீட்டிற்கு என் மனைவியின் சகோதரர்கள் தான் பண உதவி செய்தார்கள் என்றும் நான் ஒரு ரூபாய் கூட என் மனைவிக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும் வழக்குரையிலும் சிக்கீமுக்கு சென்று குடும்பம் நடத்திய விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை . எனது நிரூபண வாக்குமூலத்தை நான் வாசித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன் . என் மனைவி பி.எட் படித்ததும் அவர் செவிலியராக வேலைக்கு சென்றதும் முழுக்க முழுக்க என் மனைவியின் பெற்றோர்கள் செலவில் தான் நடந்தது என்றும் நான் ஒரு ரூபாய் கூட செலவு செய்யவில்லை என்றால் சரியல்ல . நான் என்னுடைய மகளிடமே தவறான நடக்க முயற்சி செய்தேன் என சொல்லி என் மனைவி என் மீது வேட்டவலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த புகாரின் மீது என் மகளை அரசு மருத்துவமனைக்கு

அழைத்து சென்று பரிசோதனை செய்த பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல . நான் என் மனைவியை என்னுடன் வாழ வரசொல்லி காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை.

/ உண்மை நகல் /

ஒம்/– P. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.